**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 115/2023**

**வாதி தரப்பு சாட்சி–1 ஜோதிமணி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 22.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) தாவா சொத்துக்கான சர்வே எண் 143/37 என்பது நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். சர்வே எண் 143/37 தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள நிலத்தின் விஸ்தீரணம் 2–1/2 செண்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் தாவா சொத்திற்கு உரிமை கோருகிறேனா என்றால் ஆமாம். மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள நல்லம்மாள் என்பவரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தைத்தான் நான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தின் விஸ்தீரணம் 304 சதுர அடி என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பழனியப்ப கவுண்டர் வீட்டிற்கு வடக்கு, வீரப்ப கவுண்டர் வீட்டிற்கு மேற்கு, எருதலாகவுண்டர் காலிமனைக்கு தெற்கு, பழனியம்மாள் வீட்டிற்கு கிழக்கு என நான்கெல்லை குறிப்பிடப்பட்டுளளதா என்றால் இல்லை. ஆறுமுக கவுண்டர் வீட்டிற்கு மேற்கு, சடையப்ப கவுண்டர் வீட்டிற்கு கிழக்கு என்பதுதான் சரியாகும். வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் நான்கெல்லையில் என்ன திசையிலும் காலி புறம்போக்கு இடம் இருப்பதாகவோ, ரோடு இருப்பதாகவோ காட்டப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தான 2–1/2 செண்ட் நிலம் என் பெயருக்கோ, எனது மூதாதையர் பெயருக்கோ

பாத்தியப்பட்டது என்பதற்கான உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) எனது பிரமாண வாக்குமூலத்தில் எந்த தேதியில் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டோம் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கிறேன் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் கணவர் நான் குடியிருந்த வீட்டில்தான் இறந்தாரா என்றால் இல்லை, நான் கரூரில் வாடகைக்கு குடியிருந்த வீட்டில் இறந்தார். அவரது உடலை தாவா சொத்தில் உள்ள வீட்டில் வைத்து இறுதி காரியங்கள் செய்து அடக்கம் செய்தோம். கரூரில் பணி நிமித்தம் காரணமாக வாடகை வீட்டில் குடியிருந்தோம். தாவா சொத்தில் எனது கணவருக்கு இறுதி காரியம் செய்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் 4/43 என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கதவு எண் 4/59 என்றும், வா.சா.ஆ. 6 ல் மேற்படி கதவு எண்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது பழைய கதவு எண் ஆகும்.

4) நான் சொல்வது தவறு என்றும், இரு வேறு கதவு எண்கள் இருந்தால் அதை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 1947 முதல் 1960 வரையிலான காலகட்டத்திற்கு உரியது என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழில் வா.சா.ஆ.9 கிரைய ஆவணம் பற்றி எந்த பதிவும் இல்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் எனது வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையே சுமார் 5 அடி இடைவெளி இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையின் சொத்து விபரத்தில் நான்கெல்லையில் மேற்படி 5 அடி இடைவெளியை காட்டவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 பட்டாவானது பிரதிவாதியின் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின்

தகப்பனார் ராசு கவுண்டருக்கு ராஜமாணிக்கம் என்ற மற்றொரு பெயரும் உள்ளது என்றால் சரிதான். அவர் மணிமேகலை என்பவரை திருமணம் செய்து, கருப்பையா என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான்.

5) மணிமேகலை இறந்துவிட்டார் என்றால் சரிதான். பின்னிட்டு அஞ்சலாதேவி என்பவரை இரண்டாம் திருமணம் செய்து கொண்டதில் பிறந்தவர்தான் பிரதிவாதி என்றால் சரிதான். கருப்பையா மனவளர்ச்சி குன்றியவர் என்றால் அவர் வீட்டின் வேலைகளை செய்கிறார், சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர். ராசு கவுண்டர் இறந்த பின்னிட்டு பிரதிவாதி, அவரது அண்ணன் கருப்பையா, தாயார் மூவரும் ஒரே வீட்டில்தான் வசிக்கின்றனர் என்றால் சரிதான். பிரதிவாதி வெளியூரில் தங்கி வேலை செய்கிறார் என்றால், கடந்த 3 வருடங்களாக வெளியூரில் தங்கி வேலை செய்கிறார். பிரதிவாதியின் தந்தை ராசுகவுண்டர் (எ) ராஜமாணிக்கம் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு தாவா சர்வே எண்ணில் குடிசை வீடுகட்டியும் பின்னிட்டு ஓட்டு வீடாக மாற்றியும் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல, எனது பாட்டி நல்லம்மாள்தான் தனது சகோதரர் மகனான ராசு கவுண்டருக்கு தனது நிலத்தில் வீடு கட்டி குடியிருக்க வைத்தார்.

6) மேற்படி குடிசை வீட்டில்தான் எனது பாட்டி நல்லம்மாளும், அவரது தங்கை சின்னம்மாளும் வசித்தார்கள். மேற்படி சங்கதிகளை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார்தான் தாவா சொத்தின் அனுபவம் செய்து வந்தார் என்றும், அவரது அனுபவத்தை அங்கீகரித்து வருவாய்துறையினர் உரிய விசாரணைக்கு பின்னிட்டு பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் பட்டா வழங்கினர் என்றால், நாங்கள் இல்லாத நேரத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லி பட்டா பெற்றுக் கொண்டனர். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்படாதவை என்றால் சரியல்ல. எனவே வழக்குரையில் சொல்லியுள்ள விஸ்தீரணமும்

நான்கெல்லையும், வா.சா.ஆ.9 ல் கண்டுள்ள விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லைகளும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல.

7) நல்லம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்தால் அவருக்கு மேலும் வாரிசு உள்ள விபரம் தெரியவரும் என்பதாலும், இவ்வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதாலும், அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நானோ, எனது மூதாதையரோ எந்த காலத்திலும் அனுபவத்திலோ, உரிமையிலோ இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது, அவருக்கு பின்னிட்டு பிரதிவாதி குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வெளியூரில் பணிபுரிந்து வருவதை பயன்படுத்திக் கொண்டு மனவளர்ச்சி குன்றிய அவரது அண்ணனையும், வயதான தாயாரையும் ஏமாற்றி பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவ சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**